**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 24** **நாள்: 30.01.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை மாநகராட்சியே தொடர்ந்து செயல்படுத்தும் என மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் தகவல்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளின் உடல் நலன் காத்திடவும், சோர்வின்றி கல்வி கற்றிடவும் ஏதுவாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை தொடங்கி வைத்து, தமிழ்நாடு முழுவதும் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் 356 பள்ளிகளில் 1 முதல் முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 49,147 குழந்தைகளுக்கு 35 சமையல் கூடங்களின் வாயிலாக காலை உணவு சமைத்து வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் வெளி நிறுவனத்தின் வாயிலாக காலை உணவு சமைத்து பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் கோரும் பணி ரத்து செய்து,

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 356 பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு காலை உணவு சமைத்து வழங்கும் பணியினை பெருநகர சென்னை மாநகராட்சியே தொடர்ந்து மேற்கொள்ளும் என்று மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**